**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, AMBUR, TIRUPATTUR DISTRICT**

| | |
|---|---|
| Name : திரு.R.பிரபாகரன் | Father Name : திரு.ராஜேந்திரன் |
| Village : --- | Taluk : ஆம்பூர் |
| Age : 38 | Calling: வழக்கறிஞர் ஆணையர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.08.2026

**O.S.No.107/2024** **நீ.ம.சா.1**

**வாதி தரப்பில் சாட்சியம் :**

1. மனு சொத்தை எனக்கு அடையாளம் காண்பித்தது யார் என்றால் மனுதாரர் அடையாளம் காட்டினார், அதை சர்வேயர் உறுதிப்படுத்தினார். சர்வேயருடன் யார், யார் வந்தது என்றால் சான்றோர்குப்பம் VAO மற்றும் அலுவலக உதவியாளர் வந்தனர். எனக்கு அளிக்கப்பட்ட Warrant-ல் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் அளவு நிலத்தில் சரியாக இருந்ததா என்றால் அளவு சரியாக இருந்தது. மனு சொத்தை அளவீடு செய்யும்போது பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் கொடுத்தார்களா என்றால் ஆவணம் எதுவும் அளிக்கவில்லை, ஆனால் மனு சொத்துக்கு வடக்கில் 6 அடி அகலத்தில் பொது வழி பாதை உள்ளதாக தெரிவித்தார்கள். மனு சொத்தை நான் பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடங்கள் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2. நீ.ம.சா.ஆ.2 வரைபடம் யார் அளித்த வரைபடம் என்றால் நில அளவையர் சமர்ப்பித்த வரைபடம். நீ.ம.சா.ஆ.3 வரைபடம் யார் அளித்த வரைபடம் என்றால் என்னால் வரைவு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வழக்கு சொத்தை எத்தனை மணிக்கு பார்வையிட சென்று எத்தனை மணிக்கு முடித்தோம் என்றால் காலை சுமார் 11 மணிக்கு வழக்கு சொத்துக்கு சென்றேன், சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் வருவதற்கு தாமதம் ஆனதால் வழக்கு சொத்தை பார்வையிட்டு முடிப்பதற்கு மதியம் சுமார் 2 மணி ஆனது. வழக்கு

சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்தபோது வாதி மற்றும் பிரதிவாதிகள் அவர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் அனைவரும் இருந்தார்கள் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் Fluorescent Yellow (ஒளிரும் மஞ்சள்) வண்ணம் இட்டு காட்டப்பட்டுள்ள பகுதி என்ன பகுதி என்றால் வழக்கு சொத்தின் எதிரில் அமைந்துள்ள குடிநீர் தொட்டி.

2. வாதி வீடு மற்றும் பிரதிவாதிகள் வீடு ஆகியவற்றுக்கு இடையில் ஒரு அடி அகல சந்து வழி உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். ஆக வாதி மற்றும் பிரதிவாதிகள் வீடுகள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் தனித்தனியாகத்தான் அமைந்துள்ளன என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.3 ஆணையர் அறிக்கையில் பத்தி 4–ல் மனு சொத்தினை அளவீடு செய்யும் சமயத்தில் பிரதிவாதிகள் வடக்கு பக்கத்தில் 6 அடி பொது வழி பாத்தியம் இருந்ததாக ஆட்சேபனை தெரிவித்தனர என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேலும் எனது அறிக்கையில் பத்தி 4–ல் மனு சொத்தானது வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் எவ்வித மாறும்பாடும் இன்றி பூமியில் சரியாக இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். நில அளவையர் சமர்ப்பித்துள்ள நீ.ம.சா.ஆ.2 வரைபடங்களில் நில அளவையர் நீதிமன்ற சம்மனில் உள்ளபடி பூமியில் அளவீடு செய்து சம்மனில் உள்ளவாறு 67 சதுர மீட்டருக்கு 724 1/4 சதுர அடி அளவீடு செய்து நீதிமன்ற சம்மனுக்கு பணித்து சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிட்டு கையெழுத்திட்டுள்ளார் என்றால ஆமாம்.

3. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் மாதிரி வரைபடத்திலோ அல்லது சர்வேயர் சமர்ப்பத்துள்ள வரைபடங்களிலோ பிரதிவாதிகள் யாரும் வாதியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் ஆமாம்.

(மறு விசாரணை இல்லை)

THAMARAI ILANGO G

Digitally signed by THAMARAI ILANGO G